செய்தி வெளியீடு **நாள்: 11.12.2024**

மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தலைமையில் குத்தம்பாக்கம் புறநகர் பேருந்து முனையத்தின் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை குறித்து துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

*****

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி இன்று (11.12.2024) சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும அலுவலகக் கூட்டரங்கில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** தலைமையில் குத்தம்பாக்கம் புறநகர் பேருந்து முனையத்தின் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், முனையத்தில் மேற்கொண்டு வரும் கூடுதல் பணிகள் குறித்தும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்தாலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் சென்னையிலிருந்து மேற்கு நோக்கி செல்லும் குத்தம்பாக்கம் புறநகர் பேருந்து முனையத்தின் கட்டுமானப் பணிகளின் தற்போதைய நிலை குறித்தும், முனையத்தில் மேற்கொண்டு வரும் கூடுதல் பணிகள் குறித்தும், தேசிய நெடுஞ்சாலையிலிருந்து முனையத்திற்கு வரும் பேருந்து தடங்களின் வழிகள் குறித்தும், சீரான குடிநீர் மற்றும் மழைநீர் வடிகால் பணிகள் அமைப்பது குறித்தும் மற்றும் பொதுமக்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு முனையத்தில் காவல் நிலையம் அமைப்பது குறித்தும் மற்றும் கட்டுமானப் பணிகளை விரைந்து முடித்து மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் மற்றும் பொறியாளர்களை **மாண்புமிகு அமைச்சர் அவர்கள்** அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி.காகர்லா உஷா, இ.ஆ.ப., அவர்கள், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் திரு.அன்சுல் மிஸ்ரா, இ.ஆ.ப., அவர்கள், முதன்மைச் செயல் அலுவலர் திரு.அ.சிவஞானம், இ.ஆ.ப., அவர்கள், தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் கீ.சு. சமீரன், இ.ஆ.ப., அவர்கள், மாநகர் போக்குவரத்துக் கழக (MTC) மேலாண் இயக்குநர் டாக்டர்.ஆல்பி ஜான் வர்கீஸ் இ.ஆ.ப. அவர்கள், சென்னை குடிநீர் வழங்கல் துறை செயல் இயக்குநர் திரு.செ.சரவணன், இ.ஆ.ப., அவர்கள், தலைமை திட்ட அமைப்பாளர் திரு.எஸ்.ருத்ரமூர்த்தி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைமை பொறியாளர் திரு.சரவணன், குத்தம்பாக்கம் பேருந்து முனைய தலைமை நிர்வாக அலுவலர் டாக்டர் பால் பிரின்சிலி ராஜ்குமார், SETC பொது மேலாளர் திரு.குணசேகரன், கண்காணிப்பு பொறியாளர் திரு.ராஜமகேஷ்குமார், காவல்துறை மற்றும் போக்குவரத்து துறை அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.